1987 ஏப்ரல் 22] [திரு. சு. முத்துசாமி]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களையே மனுவாக ஏற்றுக்கொண்டு அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்து ஸ்டே வாங்கியிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதனைத் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்யலாம். என்னிடத்தில் இப்போது அது பற்றித் தகவல் இல்லை. இருந்தாலும் அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இலாபகரமாக, சிறப்பாக நடப்பதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றித் தனியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து ஆய்வு செய்து, யாராவது ஒரு பெரிய அதிகாரி நேராக அங்கே சென்று பார்த்து, நிலைமைகளை அறிந்து வந்து, உரிய நடவடிக்கையெடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

(எ) நீலகிரி மாவட்டத்தில் சில பகுதிகளில் அடிக்கடி மின் தடை ஏற்படுதல்.

திரு. கே. உச்சி: துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் மின்சார விநியோகத்தில் குறையழுத்தம் ஏற்பட்டுள்ளதாலும், அடிக்கடி மின்தடை ஏற்படுவதாலும், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகள் தாழ்வு அழுத்தம் உள்ளவைகளாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளன :—

(1) கூனூர் நகரின் சில பகுதிகள்; (2) வெலிங்டன்; (3) கோத்தகிரி; (4) குந்தா.

இப் பகுதிகளில் மேம்பாட்டு வேலைகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. கூனூரில் பல பகுதிகள், மற்றும் வெலிங்டன் பகுதியின் மின் அழுத்தம் சீரான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளில் மேம்பாடு வேலைகள் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு, சீரான மின் அழுத்தத்தில் மின்சாரம் வழங்கப்படும். கூனூர் நகரத்தின் பகுதிகள், கோத்த கிரி மற்றும் குந்தா பகுதிகளில் ரூ. 3 லட்சம் செலவில் மேம்பாட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இந்த வேலைகள் அனைத்தும் மூன்று மாதங்களில் முடிக்கப்படும்.

கோத்தகிரியில் ஒரு 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இன்னும் சில தினங்களில் செயல்படத் தொடங்கும். அதனால் கோத்தகிரி தாலுக்காவில் உள்ள எல்லாப் பகுதிக்கும் குறைந்த மின் அழுத்தக் குறை முழுவதுமாக நிவர்த்திக்கப்படும்.

(முற்பகல் 11-40)

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே குன்னூர் நகரிலே உள்ள சில பகுதிகளிலேயும், வெலிங்டன், கோத்தகிரி, குந்தா ஆகிய பகுதிகளிலேயும் மின் குறைவழுத்தம் இருப்பதாகச் சொல்லப் பட்டு இருக்கிறது. அதை நீக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டு இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் நீலகிரி மாவட்டம் முழுமையும் உள்ள கிராமங்களில் உள்ள மின் குறைவழுத்தம் பற்றி கோடிட்டுக் காட்டியுள்ளேன். இதிலே என்னுடைய தொகுதியான கூடலூர் தொகுதி இடம் பெற வில்லை. கூடலூர் தொகுதியில் உள்ள பெரும்பான்மையான கிராமங்களில், மின்சாரப் பற்றாக்குறை, மற்றும் மின் குறை வழுத்தம் ஏற்படுவதால், விளக்குகள் சரியாக எரிவதில்லை. அந்தப் பகுதியில் உள்ள மின்சார விளக்குகள் பிரகாசமாக எரிய ஒரு சப்-செண்டர் அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க

1987 ஏப்ரல் 22] *[திரு. வி. வி. சுவாமிநாதன்]*

முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி தனியாகக் கேட்டால், அதற்கு நான் பதில் சொல்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொத்தமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின் அழுத்தக் குறைவுபற்றிக் கேட்டபோது, இந்தத் தகவலை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) அறநிலையத் துறை பணியாளர்கள் ஊதிய நிலை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை பணியாளர்களை ஆலயப் பணியாளர் மற்றும் துறைப் பணியாளர்கள் என்று பிரித்து, துறைப் பணியாளர்களுடைய சம்பளத்தையும், பதவி எண்ணிக்கையையும் வரைமுறையின்றி கூட்டுவதால், ஆலயப் பணியாளர்களிடையே தோன்றியுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்து சமய அறநிலையத்துறை அறக்கட்டளை சரியாக இயங்குவதற்கும் அவைகளின் வருமானத்தை பெருக்குவதற்கும் சட்டபூர்வமாக தோற்றுவிக்கப்பட்ட துறையாகும். இவ்வறக் கட்டளைகள் செம்மையாக செயல்படுவதை கண்காணிக்கும் பொருட்டு இத்துறையின் தலைவராக ஆணையாளர் ஒருவரும், அவருக்கு உதவியாக தலைமையகத்தில் இரு இணை ஆணையர் களும் (அண்மையில் நியமிக்கப்பட்டவர்கள்) துணை ஆணையர் நிலையில் இரு நேர்முக உதவியாளர்களும், முதுநிலை கணக்கு அலுவலர் ஒருவரும், மேற்பார்வை பொறியாளர் போன்ற அலுவலர்களும் மண்டலம் மற்றும் மாவட்ட அளவில் துணை

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS